LIBRARY
22 DEC 2016
UNIVERSITY, SRI

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு கல்விமாணித் தேர்வு – 2013/2014
## (2016 - ஏப்ரல்/மே)

## EDS 3133 - முகாமைத்துவக் கொள்கைகளும் பிரயோகமும் (Management theories and practice)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

விரும்பிய நான்கு (04) வினாக்களுக்கு விடை எழுதுக.

---

1. (அ) முகாமைத்துவம் தொடர்பாக கலிக், உர்விக் ஆகியோர் கூறிய கருத்துக்கள் பயன்தரு நிறுவன நடத்தைக்கு எவ்வாறு பயன்படுகின்றன என்பதைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

   (ஆ) சிறந்த முகாமைத்துவம் ஒன்றின் அடிப்படைத் தொழிற்பாடுகளையும், நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு வேண்டிய பண்புகளையும் உதாரணங்கள் மூலம் விளக்குக. (15 புள்ளிகள்)

2. (அ) “முகாமைத்துவத்தின் குறிக்கோள்களை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போது நிறுவனங்கள பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்குகின்றன” ஒரு நிறுவனம் அதன் முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பயன்படும் 5 வகையான அணுகுமுறைகளை எவ்வாறு பயன்படுத்துகின்றது என்பதைப் பகுப்பாய்வு செய்க. (13 புள்ளிகள்)

   (ஆ) முகாமைத்துவச் செயன்முறையின் அடிப்படை மூலகங்களுள் மனிதத் தொடர்புகள், தொடர்பாடல் என்பனவற்றின் முக்கியத்துவத்தை விமர்சிக்குக. (12 புள்ளிகள்)

3. (அ) “நிறுவனம் ஒன்றை முகாமை செய்வதன் வெற்றி ஆளணியினரை முகாமை செய்வதிலேயே தங்கியுள்ளது” ஆளணி முகாமைத்துவத்தில் ஊக்குவித்தல் சுகாதாரக் கோட்பாடு பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

   (ஆ) விஞ்ஞான முகாமைத்துவம் என்றால் என்னவென்பதை விளக்குவதுடன் இம் முகாமைத்துவத்தில் தொழில்திறனை அதிகரிப்பதற்காக கூறப்படும் 5 படிமுறைகளையும் ஒரு நிறுவனத் தலைவர் எவ்வாறு கைக்கொள்ளலாம் என்பதைத் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

4. (அ) ஹென்றி பயோலினால் முன்வைக்கப்பட்ட முகாமைத்துவ ஒழுங்கமைப்புக்களை உருவாக்குவதற்கான சூத்திரத்தில் கூறப்படும் 6 வகையான செயற்பாடுகளும் எவ்வாறு நவீன முகாமைத்துவத்தில் முன்னெடுக்கப்படுமாற்றைப் பரிசீலணை செய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) ஹென்றி பயோல் கூறும் "பயன்தரும் தன்மையுள்ள நிருவாகத்தின் பொது உண்மைகள்" எவ்வாறு ஒரு பாடசாலை நிருவாகத்தில் தென்படுகின்றன என்பதைப் பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து பகுப்பாய்வு செய்க.

(13 புள்ளிகள்)

5. (அ) ஒரு வகுப்பறையின் வகுப்பாசிரியர் முகாமையாளர் என்ற அடிப்படையில் மாணவர்களைத் தொழிற்படத் தூண்டுவதற்காக ஏபிரகாம் மாஸ்லோவின் தேவைக் கோட்பாட்டினை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைத் தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)

(ஆ)குறிக்கோள் அடிப்படையிலான முகாமைத்துவமானது ஒரு பாடசாலையை எவ்வாறு உயர் அடைவுமட்டத்திற்கு இட்டுச்செல்கின்றது என்பதை விளக்குக.

(13 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றிற்கு சுருக்கமான விளக்கம் தருக.

1. மாஸ்லோவின் "இயுசிக்கேயன்" முகாமைத்துவப் பண்புகள். (08 புள்ளிகள்)
2. மின்ஸ்பேர்க்கின் தகவல்சார் வகிபங்குகள். (09 புள்ளிகள்)
3. கல்வி முகாமைத்துவத் தகவல் தொகுதியில் முறைமைக்கோட்பாடு.

(08 புள்ளிகள்)